கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (18.9.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், அதிமுகவின் நாளிதழான நமது எம்.ஜி.ஆர் மற்றும் நமது அம்மா பத்திரிகைகளின் முன்னாள் ஆசிரியர் மருது அழகுராஜ் அ.தி.மு.க.வில் இருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தார். இந்நிகழ்வின்போது, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, கழக தலைமை நிலைய அலுவலகச் செயலாளர்கள் பூச்சி முருகன், துறைமுகம் காஜா மற்றும் நிருவாகிகள் உடனிருந்தனர்.

கடல்வழி வணிகத்தை ஊக்குவிக்க வேண்டியது தலையாய கடமை என்று சென்னையில் நடைபெறுகின்ற நீலப் பொருளாதார மாநாடு 2025–ஐ தொடங்கி வைத்து, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றினார். இந்த நீலப் பொருளாதார மாநாட்டில், சென்னை மற்றும் காமராஜர் துறைமுக ஆணையத்தின் தலைவர் சுனில் பாலிவால், IAS., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ் IAS., தமிழ்நாடு கடல்சார் வாரிய முதன்மைச் செயலாளர் / துணைத்தலைவர் மற்றும் தலைமை செயல் அலுவலர் தி.ந.வெங்கடேஷ், IAS., இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு மாநில துணைத்தலைவர் C.தேவராஜன் மற்றும் துறைமுக மேம்பாட்டாளர்கள், துறைமுக நிர்வாகிகள், துறைமுக பயனீட்டாளர்கள், கடல்சார் சுற்றுலா சார்ந்த செயல்பாட்டாளர்கள், மீன்வள மற்றும் மீன்வளர்ப்புத் துறை சார்ந்த வல்லுனர்கள், கப்பல் கட்டுதல், பழுதுபார்த்தல் துறை வல்லுநர்கள், இந்த மாநாட்டு கருத்தரங்கிற்கு வந்திருக்கும், பல்வேறு துறைசார்ந்த வல்லுநர்கள், கடல்சார் வாரிய அலுவலர்கள், பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டின் உள் கட்டமைப்பு சிறப்பாக உள்ளது

கடல்வழி வணிகத்தை ஊக்குவிப்பது தலையாய கடமை!

நீலப் பொருளாதார மாநாட்டில் – அமைச்சர் எ.வ.வேலு வலியுறுத்தல்!

சென்னை, செப். 20 - கடல்வழி வணிகத்தை ஊக்குவிக்க வேண்டியது தலையாய கடமை - என்று சென்னையில் நடைபெறுகின்ற நீலப் பொருளாதார மாநாடு -2025ஐ தொடங்கி வைத்து, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றினார்.

சென்னையில் தியாகராய நகர் ஹோட்டல் ரெசிடென்சியில் நேற்று முன்தினம் (18.09.2025) நீலப் பொருளாதார மாநாடு-2025ஐ (Blue Economy Submit 2025) பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்து உரையாற்றினார்.

நீலப் பொருளாதார மாநாடு என்று சொல்வதைவிட, இதனை நீலப் பொருளாதார கருத்தரங்கம் என்று சொல்வதே பொருத்தமானதாக இருக்கும் என்று தெரிவித்து, உரையை தொடங்கிய அமைச்சர், முதலமைச்சர், 1 டிரில்லியன் டாலர் அளவிற்கு தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த நீலப் பொருளாதாரத்தின் பங்கினை மேம்படுத்த இந்த மாநாட்டில் பங்குப்பெறும் அனைத்து வல்லுநர்களும் அனுபவமிக்க கருத்துகளை இந்த மாநாடு மூலமாக தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாட்டின் கடற்கரை பிற மாநில கடற்கரைகள் போல் அல்லாமல், வங்காள விரிகுடா, அரபிக்கடல், இந்தியப் பெருங்கடல் பகுதிகளைக் கொண்ட ஒரு தீபகற்ப கடற்கரை பகுதியாகும். பன்னாட்டுக் கப்பல்கள் செல்லும் வழித்தடத்திற்கு மிக அருகாமையில் கடற்கரை கொண்ட பகுதியாகும். மேலும், தெற்கே நெருங்கிய உறவுகள் கொண்ட அண்டை நாடாக இலங்கை உள்ளது.

14 கடலோர மாவட்டங்கள் கொண்ட தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதியைப் பயன்படுத்துவோர் பல்வேறு தரப்பினர். குறிப்பாக தங்கள் வாழ்வாதாரத்திற்கு கடற்கரை பகுதியிலேயே குடியிருந்து மீன்பிடித் தொழில் செய்து வரும் மீனவர்கள், மீன்பிடி துறைமுகங்கள், மீன்வளர்ப்புப் பண்ணைகள், வணிக ரீதியாக ஒன்றிய மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டிலுள்ள துறைமுகங்கள், மக்கள் பொழுதுபோக்கு கடற்கரை பகுதிகள் (Beaches) சுற்றுச்சூழல் பாதுகாப்பு பகுதிகளான அலையாத்தி காடுகள், ஆமைகள் முட்டையிடும் பகுதிகள், மன்னார் வளைகுடா பவளப் பாறைகள் நிறைந்த பகுதிகள், பறவைகள் சரணாலயங்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கோவில்கள் (திருச்செந்தூர், இராமேஸ்வரம்), தேவாலயங்கள் (வேளாங்கண்ணி, மணப்பாடு), இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்கள் (நாகூர்), கடலோர தொழில் பூங்காக்கள், கலங்கரை விளக்கங்கள் என்று எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு மிகப்பழமையான கடல்சார் வரலாற்றை கொண்டது. பண்டைய தமிழ் மன்னர்கள் கடல்கடந்து வாணிபம் செய்ததோடு, சக்திவாய்ந்த கப்பல்படைகொண்டு, தெற்காசிய நாடுகள் சுமத்ரா, ஜாவா வரை கைப்பற்றி தங்கள் சாம்ராஜ்யத்தை நிலைநாட்டியுள்ளனர். கப்பல் கட்டுதலில் மிகச்சிறந்த தொழில்நுட்பங்கள் பழங்காலத்திலிருந்தே தமிழ்நாட்டில் இருந்தததற்கான சான்றுகள் உள்ளன. பண்டைய தமிழ்நாட்டுத் துறைமுகங்களிலிருந்து தென்கிழக்கு ஆசியா, இலங்கை, ரோம், கிரேக்க நாடுகளுடன் வாணிபம் நடைபெற்று வந்துள்ளது என்று தெரிவித்த அமைச்சர்,

உலகளவில், சுமார் 80% சதவீத வணிகமும், மிகநீண்ட சுமார் 11000 கிலோ மீட்டர் நீள கடற்கரைப் பகுதியைக் கொண்ட நம் நாட்டில் சுமார் 95% சதவீத வணிகம் கடல்வழியாக நடைபெறுகிறது. தமிழ்நாட்டில் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை எட்ட வேண்டும் என்ற இலக்கோடு பயணித்துக் கொண்டிருக்கும் நமக்கு இந்த நீலப் பொருளாதாரம் அதாவது கடல்வழி வணிகத்தை மேலும் ஊக்குவிக்க வேண்டியது நம் தலையாயக் கடமை. அதற்கு வணிகத்துறைமுகங்கள், மீன்பிடித் துறைமுகங்கள், கடல்சார் சுற்றுலா மேம்பாடு, கப்பல் கட்டுதல் மற்றும் பழுதுபார்த்தல், ஆகிய துறைகளில் நாம் மேலும் முன்னேற்றமடைய திட்டங்களை வகுக்கவேண்டும். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் டாலர் அளவுக்கு கொண்டு செல்ல ஒவ்வொரு நாளும், முதலமைச்சர் - திராவிட மாடல் அரசை வழிநடத்திக் கொண்டிருக்கும் தளபதி மு.க.ஸ்டாலின், பல்வேறு திட்டங்களை வடிவமைத்து கொண்டிருக்கிறார் என்றும்;

2024-25ஆம் ஆண்டுக்கான இந்தியாவின் ஒட்டு மொத்த GDP சுமார் 6-7 சதவீதம் இருக்கும்போது, தமிழ்நாட்டின் GDP இந்தியாவிலேயே முதல் மாநிலமாக இரட்டை இலக்கத்தில் அதாவது 11.2% சதவீதம் வளர்ச்சியினை எட்டியுள்ளது. இதற்கான முக்கிய காரணங்கள் தமிழ்நாட்டின் உள்கட்டமைப்பு மேம்பாடுகள், மனிதவள திறன் மேம்பாடு, அதிக வாகன உற்பத்தி நிறுவனங்கள் (இந்தியாவின் டெட்ராய்ட்- மோட்டார் நகரம்), ஜவுளி உற்பத்தி நிறுவனங்கள், மின்னணு சாதன உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் எளிதில் தொழில் துவங்க உகந்த மாநிலமாக உள்ளது ஆகியவனவாகும் என்று தெரிவித்தார்.

கடல்மார்க்கமாக கப்பல்கள் மூலம் கொண்டு செல்லும் சரக்கு வணிகத்தில், சாலை மற்றும் இரயில் மூலமாக கொண்டு செல்லும் கட்டணத்தைவிட மிகக் குறைவானதாகும். மேலும், சுற்றுப்புறச் சூழல் மாசின்றி சரக்குகளை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்ல இயலும். மேலும், சென்னை - கன்னியாகுமரி சாலையும், கிழக்கு கடற்கரை சாலையும் நம் கடலோர வணிக துறைமுகங்கள் மற்றும் மீன்பிடி துறைமுகங்களுக்கு எளிதான சாலை இணைப்பினை வழங்குகிறது. மேலும் தமிழ்நாட்டில் கடற்கரை பகுதிகளுக்கு இரயில் இணைப்பும் போதிய அளவில் உள்ளது. இந்த துறைமுக மேம்பாட்டாளர்கள் கருத்தில் கொண்டு துறைமுகங்களை அமைக்கவும், தொழில் துவங்கவும் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இத்தகையப் பெருமை வாய்ந்த தமிழ்நாட்டில், நீலப் பொருளாதாரத்தினை உயர்த்துவதற்கான வழிமுறைகள் குறித்து விவாதிக்க இத்துறை சார்ந்த வல்லுநர்கள், அழைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் கருத்து பரிமாற்றம் ஆக்கப்பூர்வமாக அமைய வாழ்த்துகளை தெரிவித்தார்.

துறைமுக மேம்பாட்டாளர்கள், கப்பல் கட்டுதல் மற்றும் பழுதுபார்ப்புத் தொழில் வல்லுநர்கள், மீன்வளம் மற்றும் சுற்றுலாத்துறைகளின் நிபுணர்களின் அனுபவமிக்க கருத்துக்களை தெரிவிக்க வந்துள்ள அனைத்து விருந்தினர் களுக்கும், புகழ்பெற்ற பேச்சாளர்களுக்கும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

இந்த நீலப் பொருளாதார மாநாட்டில், சென்னை மற்றும் காமராஜர் துறைமுக ஆணையத்தின் தலைவர் சுனில் பாலிவால், IAS., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ் IAS., தமிழ்நாடு கடல்சார் வாரிய முதன்மைச் செயலாளர் / துணைத்தலைவர் மற்றும் தலைமை செயல் அலுவலர் தி.ந.வெங்கடேஷ், IAS., இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு மாநில துணைத் தலைவர் சி.தேவராஜன் மற்றும் துறைமுக மேம்பாட்டாளர்கள், துறைமுக நிர்வாகிகள், துறைமுக பயனீட்டாளர்கள், கடல்சார் சுற்றுலா சார்ந்த செயல்பாட்டாளர்கள், மீன்வள மற்றும் மீன்வளர்ப்புத் துறை சார்ந்த வல்லுனர்கள், கப்பல் கட்டுதல், பழுதுபார்த்தல் துறை வல்லுநர்கள், இந்த மாநாட்டு கருத்தரங்கிற்கு வந்திருக்கும், பல்வேறு துறைசார்ந்த வல்லுநர்கள், கடல்சார் வாரிய அலுவலர்கள், பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.9.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில துணைச் செயலாளர் கா. ரபி அகமது தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கழக தலைமை நிலைய அலுவலகச் செயலாளர் துறைமுகம் காஜா உள்ளார்.

இசைஞானி இளையராஜாவுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் பாராட்டு விழா நடத்தி

அனைவர் மத்தியிலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் உயர்ந்து நிற்கிறார்!

'தி இந்து' ஆங்கில நாளிதழ் பாராட்டு!

சென்னை, செப். 20 - இசைஞானி இளையராஜாவுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் பாராட்டு விழா நடத்தி அனைவரது மத்தியிலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உயர்ந்து நிற்கிறார் என 'தி இந்து' ஆங்கில நாளிதழ் பாராட்டு தெரிவித்துள்ளது.

'தி இந்து' ஆங்கில நாளிதழில் இசைஞானி இளையராஜாவுக்கு தமிழ்நாடு அரசு பாராட்டு விழா நடத்தியது குறித்து செய்தியாளர் கோலப்பன் சிறப்புக் கட்டுரை எழுதியுள்ளார்.

Hitting all the right notes

Chief Minister M.K. Stalin steals BJP's thunder in felicitation of maestro Ilaiyaraaja

K. Kalappan

The Tamil Nadu Chief Minister, M.K. Stalin, has scored a point. By taking it upon himself and the State government to honour maestro Ilaiyaraaja, on a mass scale, on his completion of 50 years in the film industry and for outstanding a somebrow, Mr. Stalin has focused on what the Bharatiya Janata Party (BJP) failed to capitalise on. Instead of being Ilaiyaraaja, a quintessential Tamil icon, and showing that if he can be a supporter of the BJP and a lot known of Prime Minister Narendra Modi, so can the average Tamil, who is pious and religious, the party has done little on the ground to build on Ilaiyaraaja's popularity and acceptance.

It is not as if the BJP has not accorded Ilaiyaraaja his due. The party nominated him to the Rajya Sabha, invited him to perform at both the Kashi Tamil Sangamam (2022), and at Gangaikonda Cholapuram (July 2025) which Mr. Modi visited to mark 1,000 years since Chola King Rajendra I's conquest of the North. But the BJP's inertia in felicitating or arranging the conferment of the Bharat Ratna on Ilaiyaraaja has given Mr. Stalin a leg up and reinforce the point that the massive transnational narrative and belongs to the world of music. At a function in Chennai on September 13, Mr. Stalin made an appeal to the BJP government to confer the Bharat Ratna on Ilaiyaraaja. It is an appeal that the BJP cannot ignore.

Ilaiyaraaja said, "I am overwhelmed and overjoyed by the scale of the event. Why such love? Perhaps it is because of my music. Only he (Mr. Stalin) can answer... Ilaiyaraaja has considered my symphony (an hour) a great achievement. I believe he must have felt (that) it was the duty of the state government to honour a Tamil who has gained world-wide fame."

It was a masterstroke by Mr. Stalin. In March this year, Ilaiyaraaja had travelled to London to release his new composition — a symphony that was to be performed by the Royal Philharmonic Orchestra. The moment this became known, Mr. Stalin visited the maestro to offer his greetings. The government also organised a reception for the music maestro on his return. Ilaiyaraaja recalled that he had expressed his desire to Mr. Stalin to bring the Royal Philharmonic Orchestra to Tamil Nadu, and recalled Mr. Stalin's reaction — "Yes, it can be done."

Mr. Stalin is aware that Ilaiyaraaja, despite his political leanings, is a source of Tamil pride and represents cultural capital. When Ilaiyaraaja was trolled on social media by the supporters of her ex-husband, Mr. Modi, Mr. Stalin intervened to stop the campaign. All his fans may share his political ideology, but they will not tolerate any criticism made against Ilaiyaraaja. It was Mr. Stalin's late father and the longest serving Tamil Nadu Chief Minister, M. Karunanidhi, who had conferred the title 'Isaignani' on Ilaiyaraaja. The musician, whose birthday falls on June 3 — the same day as Karunanidhi's — was astute to move the day to June 2.

At the felicitation ceremony, Ilaiyaraaja, who would usually begin his concert with an invocation of Gaddam Mohandas, by rendering a non-lyrical, instead chose a film song, Amaiyai Tandiya Ar Anjiye Manthiye Thandiyane ("Never like Tamil is a friend for language and my life"). It struck a chord with the audience which included Mr. Stalin, his cabinet colleagues and officials.

A day later, Ilaiyaraaja acceded to Mr. Stalin's request — that he should compose music for Sangam period literature. Ilaiyaraaja's announcement has been well appreciated.

After his close association with the Communist Movement — his elder brother, Pavalar Varadharajan was a singer popularising the ideology and politics, while Ilaiyaraaja and their other brothers as instrumentalists — Ilaiyaraaja was politically neutral, but retained an identity of being a devotee of Kamaraj. Nedumaran of Thiruvarur.

Ilaiyaraaja and his brothers are admirers of writer and Communist-turned-Congress supporter Jayakanthan, another Tamil icon. Jayakanthan was a bitter critic of the Dravidian Movement, but fortunately succeeded in wielding his axe, extending Jayakanthan's admirers.

Mr. Stalin appears to have taken the cue from his father and done the same thing with Ilaiyaraaja, being upset by the role of C.N. Annadurai, the founder of DMK, that "politics smells sweet even if it blooms in another's garden."

திரைத்துறையில் இசைஞானி இளையராஜாவின் 50 ஆண்டுகால அளப்பரிய பணியை கௌரவிக்கவும், லண்டனில் சிம்பொனி இசை நிகழ்ச்சி நடத்தி உலகரங்கில் தமிழர்களை பெருமைப்படுத்தியதைப் பாராட்டியும், தமிழ்நாடு அரசு சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரமாண்டமாக பாராட்டு விழா நடத்தியதாக பெருமையுடன் கூறியுள்ளார்.

தமிழரின் அடையாளமாக திகழும் இளையராஜா, பா.ஜ.க. ஆதரவாளர், பிரதமர் மோடியை பின்பற்றுபவர். தான் சார்ந்த மதத்தின் மீது மிகுந்த பக்தி கொண்டவர் என்றாலும் இளையராஜாவின் புகழை, அவர் சார்ந்திருக்கும் பா.ஜ.க. கட்சியே மக்கள் மன்றத்தில் போற்றி புகழவில்லை என 'தி இந்து' ஆங்கில நாளிதழ் கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இசைஞானியை மக்கள் மன்றத்தில் வைத்து பாராட்டு விழா நடத்திய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இளையராஜாவுக்கு 'பாரத ரத்னா' விருது வழங்க வேண்டும் என, ஒன்றிய பா.ஜ.க. அரசால் புறந்தள்ள முடியாத கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தமிழ்நாடு அரசு நடத்திய பாராட்டு விழா தன்னை மிகுந்த நெகிழ்ச்சியில் ஆழ்த்தியதாக இளையராஜாவும் மகிழ்ச்சியுடன் கூறினார். சங்க இலக்கியப் பாடல்களுக்கு இசையமைக்க இருப்பதாகவும் முதலமைச்சர் கோரிக்கையை ஏற்று இளையராஜா அறிவித்துள்ளார்.

தமிழ், தமிழரின் பெருமை இளையராஜா என்பதை முதலமைச்சர் நன்கு அறிந்தவர் என 'தி இந்து' நாளிதழ் பாராட்டியுள்ளது.

இடதுசாரிச் சித்தாந்தங்களுடன் செயல்பட்ட எழுத்தாளர் ஜெயகாந்தனை, கலைஞர் ஈர்த்ததைப் போல், இளையராஜாவையும் முதலமைச்சர் கவர்ந்துள்ளார். "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்ற பேரறிஞர் அண்ணா கூறிய உவமையைச் சுட்டிக்காட்டியுள்ள 'தி இந்து' நாளிதழ், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் செயல்பாடுகள் இருப்பதாக புகழாரம் சூட்டியுள்ளது.

கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களை தி.மு.க.வின் உயரிய விருதான தந்தை பெரியார் விருது பெற்ற கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாநிலச் செயலாளரும், தமிழ்நாடு வக்பு வாரிய உறுப்பினருமான டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில் தஞ்சாவூர் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநில துணைச் செயலாளர்கள் அன்வர் அலி, ராபர்ட் ராஜதுரை மற்றும் தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய மாவட்டம், தஞ்சை தெற்கு, திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களை உள்ளடக்கிய கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட அமைப்பாளர்கள் பாவை அனிபா, ஷாகுல் அமீது, தனிஸ்லாஸ், மாவட்ட தலைவர் மரியதாஸ், மாவட்ட துணைத் தலைவர் முகமது ஜின்னா, மாவட்ட துணை அமைப்பாளர்கள் பஷீர் அகமது, அந்தோணி சாமி, அமானுல்லா, அமீது, ராயல் அலி, முகமது ஆரிஃப் மற்றும் ஏராளமான கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, நேற்று முன்தினம் (18.09.2025) கரூர் மாவட்டம், கோடங்கிபட்டியில் ரூபாய் 11.87 கோடி திட்ட மதிப்பில், 2.55 ஏக்கரில் அமைந்துள்ள M/s. OASIS Tex Park Private Limited ஜவுளிப் பூங்காவை (Mini Textile Park) திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.செந்தில் பாலாஜி, ஆர்.இளங்கோ, க.சிவகாம சுந்தரி, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர் வே. அமுதவல்லி, கைத்தறி இயக்குநர் மகேஸ்வரி ரவிக்குமார், துணிநூல் துறை இயக்குநர், இரா.லலிதா, கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தங்கவேல் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் அலுவலர்கள் உடனிருந்தனர்.